**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.960/2022**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணேசன் | தொழில் | : பத்திர எழுத்தர் |
| தகப்பனார் பெயர் | : ரங்கசாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : காப்பிலியபட்டி | வயது | : சுமார் 64 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 27.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதால் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன் என்றால் ? சரிதான். கிரைய உடன்படிக்கை ஆவணத்தை நான் தான் எழுதியுள்ளேன் என்றால் ? ஆமாம். வழக்கின் வாதி, பிரதிவாதிகளை தெரியும் என்றால் ? தெரியும். பிரதிவாதி பழனிச்சாமி உயிருடன் உள்ளாரா என்றால் ? இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன். எனது அலுவலகம் எங்கு வைத்துள்ளேன் என்றால் ? ஒட்டன்சத்திரத்தில் பத்திர பதிவு அலுவலகத்திற்கு எதிரே உள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் அலுவலகம் வைத்துள்ளேன். வழக்கு கிரைய உடன்படிக்கை எந்த தேதியில் எழுதினேன் என்று நினைவு இருக்கிறதா என்றால் ? 13.08.2003 ஆகும். கிரைய உடன்படிக்கையின் காலம் எவ்வளவு என்றால் ? ஒரு வருடம் ஆகும். கிரைய உடன்படிக்கையில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் ? முனியப்பன், N.K.தங்கவேல் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். கிரைய உடன்படிக்கையின் மொத்த தொகை எவ்வளவு என்றால் ? ரூ.4,80,000 ஆகும். கிரைய உடன்படிக்கையில் உள்ள சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? காவேரியம்மாபட்டி கிராமத்தில் சொத்து உள்ளது. சர்வே எண் எனக்கு

நினைவில் இல்லை. கிரைய உடன்படிக்கை ஏற்பட்ட நாளில் அட்வான்ஸ் தொகை எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் ? ரூ.4,50,000 கொடுத்தார். அட்வான்ஸ் தொகை ரூ.4,50,000 யை யார், யாரிடம் கொடுத்தார் என்றால் ? சொத்தை எழுதிக் கொடுத்தவரும், வாங்கியவரும் பெற்றுக் கொண்டதாக சொன்னார்கள். கிரைய உடன்படிக்கை காலம் முடிந்த பிறகு நீட்டிப்பு பத்திரம் ஏதேனும் போடப்பட்டதா என்றால் ? எதுவும் இல்லை. கிரைய உடன்படிக்கையின் போது பழனிச்சாமி என்பவருடன் யார் யார் இருந்தார்கள் என்றால் ? எழுதி வாங்கியவர் மற்றும் இரண்டு சாட்சிகள் வந்திருந்தார்கள். கிரைய உடன்படிக்கை சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் ? ஞாபகம் இல்லை.

<u>2, 5, 6, 8 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

நான் எத்தனை ஆண்டு காலமாக ஆவணம் எழுதி வருகிறேன் என்றால் ? 45 வருட காலமாக ஆவணங்கள் எழுதி வருகிறேன். வழக்கின் வாதி தங்கவேல் எனக்கு பலவருடமாக எனக்கு பழக்கம் என்றால் ? ஆமாம். வாதி தங்கவேல் தொழில் சம்மந்தமாக எந்த ஆவணங்கள் எழுதினாலும் அதை நான் தான் எழுதுவேன் என்றால் ? ஆமாம். வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவர் எந்த ஆவணங்கள் எழுதினாலும் சரிவர விசாரிக்காமல் அப்படியே எழுதிவிடுவேன் என்றால் ? சரியல்ல. விசாரித்து ஆவணங்களை சரிபார்த்து தான் எழுதுவேன். தாவா கிரைய ஒப்பந்தம் நான் எழுதியது என்றால் ? சரிதான். தாவா ஒப்பந்த பத்திரத்திற்கான முத்திரை தாள் யார் வாங்கியது என்றால் ? சொத்தினை எழுதி வாங்க கூடிய தங்கவேல் வாங்கினார். எந்த தேதியில் வாங்கினார் என்றால்? 13.08.2003ம் தேதியில் வாங்கினார். 1-ம் பிரதிவாதி பழனிச்சாமியை 13.08.2003ம் தேதிக்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் ? சரிதான், எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி என்னை நேரில் சந்தித்து ஆவணம் எழுதும்படி கேட்டது கிடையாது என்றால் ? இந்த ஆவணம் எழுதக்கூடிய அன்றைய தினம் வந்திருந்தார். அதற்கு முன்பு என்னை 1-ம் பிரதிவாதி கேட்டது இல்லை.

ஆவணங்கள் என்னிடம் கொடுக்கும்போதே ஒப்பந்த பத்திரத்தில் சாட்சிகள் கையொப்பம் செய்திருந்தார்களா என்றால் ? பத்திரத்தை டைப் செய்த பிறகு தான் கையெழுத்து வாங்கினேன். சொத்தின் மதிப்பு ரூ.4,80,000 என்றும், ரூ.4,50,000 முன்பணமாக கொடுப்பதாகவும் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் ? சரிதான். தொகை ரூ.4,50,000 தொகையினை தங்கவேல் என்பவர் பழனிச்சாமியின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துவிட்டார் என்றால் ? ஏற்கனவே தொகை பரிமாற்றம் முடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார்கள். மொத்த ஒப்பந்த தொகையில் 90 சதவீதம் தொகையை முன்பணமாக கொடுத்துள்ள நிலையில் மீதி தொகைக்கு குறைவாக இருப்பதால் ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்து கொள்ளலாம் என்று நான் ஆலோசனை வழங்கினேனா என்றால் ? நான் ஆலோசனை வழங்கினேன். அவர்கள் பதிவு செய்யாத பத்திரமாக வைத்துக் கொள்ளலாம் என்றால் அவர்கள் பதிவுகள் மேற்கொள்ளவில்லை. ஆவணங்கள் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ? என்னுடைய அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. ஆவணம் எழுதும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் ? 20 வருடத்திற்கு மேல் ஆகிவிட்டதால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. 90 சதவீதம் முன்பணமாக கொடுத்துள்ள நிலையில் பாக்கி தொகைக்கு ஒரு வருடம் காலநீட்டிப்பு யாரும் செய்யமாட்டார்கள் என்றால் ? அது அவரவர்கள் விருப்பம் ஆகும். நான் ஆவணம் எழுதும் போது அலுவலகத்தில் யார் யார் இருந்தோம் என்றால் ? எழுதிக் கொடுத்தவர் பழானிச்சாமிகவுண்டர், எழுதி வாங்கியவர் A.K.தங்கவேல், சாட்சிகள் முனியப்பன், N.K.தங்கவேல் ஆகியோர்கள் இருந்தார்கள். சாட்சிகள் இருவரும் யார் சொல்லி வந்தார்கள் என்றால் ? அது எனக்கு தெரியாது. எழுதிக் கொடுப்பவர் மற்றும் வாங்குபவர்களுடன் வந்திருந்தார்கள். எனது அலுவலகத்திற்கு முதலில் யார் வந்தது என்றால் ? எழுதிக் கொடுப்பவர் மற்றும் வாங்குபவர் மற்றும் சாட்சிகள் இருவர் ஆகிய நான்கு நபர்களும் வந்திருந்தார்கள். நான் எழுதக்கூடிய ஆவணங்களுக்கு என்ன வகையான ஆவணங்கள் எழுதுகிறேன் என்று பதிவேடு

வைத்துள்ளேனா என்றால் ? ஆமாம். பதிவு செய்யாத ஆவணத்தை பெரும்பாலும் நான் பதிவேட்டில் எழுதுவதில்லை. கிரைய முன்பண தொகை எனது முன்பு அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்படவில்லை என்றால் ? எனது முன்பாக கொடுக்கவில்லை. பழனிச்சாமிகவுண்டரிடம் தங்கவேல் என்பவர் வட்டிக்கு பணம் கொடுத்தற்காக கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டார் என்றாலும், நான் தட்டச்சு செய்து ஒப்பந்தமாக தயார் செய்துவிட்டேன் என்றால் ? சரியல்ல. ஒப்பந்த பத்திரத்தில் டைப் செய்த பிறகு தான் கையொப்பம் வாங்கினேன். பழனிச்சாமி கவுண்டரும் எனது அலுவலகத்தில் வந்து கையொப்பம் செய்தாரா என்றால் ? ஆமாம்.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.27 16:54:02 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்